ஸ்ரீ இராமகிருஷ்ணா
மகளிர் கலை அறிவியல் கல்லூரி
கோவை - 44

❖மலர் 2

## தமிழ்த்துறை

# தீந்தமிழ் மஞ்சரி

## 2019 – 2020

## ஆண்டு மலர்



## தலையங்கம்

எஸ்.என்.ஆர் அறக்கட்டளையின் கீழ் இயங்கி வரும் மகளிருக்கான முதல் சுய நிதிக்கல்லூரி என்ற பாரம்பரியப் பெருமையுடன் ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரி திகழ்கிறது. 1991 ஆம் கல்வியாண்டு முதல் தமிழ் இலக்கியப் பேரவைக் கால் நூற்றாண்டைக் கடந்து தாய்மொழியோடு கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களை மாணவியர்களுக்குக் கற்றுத்தருகிறது. 21 ஆம் நூற்றாண்டின் இயந்திர உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் நாகரிக செழுமையைப் போற்றிப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தில் உள்ளோம். சான்றோர்கள் உணர்ந்த அனுபங்களை இன்றைய இளைய சமுதாயத்தினருக்கு எடுத்துக்கூறி வழிகாட்ட வேண்டும். 2019 - 2020 ஆம் கல்வியாண்டில் தமிழ்த்துறையின் ஆண்டு மலரை தமிழ்த்துறை சார்பாக வெளியிடத் திட்டமிட்டுள்ளோம்.

வளமார்ந்த மொழி வளர்ச்சிக்குத் தீராத வேட்கையால் 'தீந்தமிழ் மஞ்சரி' என்று பெயரிட்டோம். பூஞ்சோலையில் பன்மலர்கள் மணம் பரப்பிப் பூரிக்கச்செய்வது போல் தீந்தமிழ் மஞ்சரி ஆண்டு மலரில்,

பைந்தமிழ் வளர்ச்சிப் பாதையில் படைப்பாளிகளின் பங்களிப்பு அளவிடற்கரியது. பன்னிரு மாத கல்விப் பயணத்தில் சொற்பொழிவுகள், பயிற்சிக் களங்கள், கருத்தரங்குகள், விவாத மேடை, பட்டிமன்றம், இணையவழி ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிலரங்குகள், மாணவியர்களுக்கான தன்னம்பிக்கை உரையரங்கம் எனப் பல்வேறு நிகழ்வுகளின் தொகுப்பாக தீந்தமிழ் மஞ்சரியில் சிந்தனை முத்துக்கள் ஏராளமாய்க் காணக்கிடக்கின்றன.

எட்டுத்திக்கும் மொழிவளம் காணும் முயற்சியில் எம்துறைப் பேராசிரியர்கள் மின் நூல் வெளியிடுவதும், இலட்சிய எண்ணங்களைப் புதுப்பிக்கும் நோக்கில் கருத்தாழம் மிக்கக் கதைகளை உருவாக்கி செந்தமிழுக்குச் சிறப்புரிமைத் தருவதில் பெருமைக் கொள்கிறோம். வருங்காலம் வளமாக, நிகழ்கால நிழலோடு தொடர்கிறோம்.


<u>தலைமைப் பதிப்பாசிரியர்</u>
முனைவர். கி.சித்ரா
முதல்வர்

<u>பதிப்பாசிரியர்</u>
முனைவர்.வெ.நிர்மலா
தமிழ்த்துறைத் தலைவர்

<u>உறுப்பினர்கள்</u>
முனைவர்.மு.ரேவதி
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை

ஆ. மதியரசி
முதலாம் ஆண்டு
முதுகலை
நுண்ணுயிரியியல்

## குறிக்கோள்




சமுதாயத்தை ஆழ்ந்து நோக்குகின்ற பருந்துப் பார்வையுடன், சமுதாயத்தில் நிகழும் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் வகையில் ஒரு சிறந்தப் படைப்பாளரை தமிழ்க் கல்வியுடன் உருவாக்குதல். பண்பாடு, கலாச்சாரத்துடன் கூடிய வாழ்வியல் நெறிகளை இலக்கியக் கல்வி மூலம் பயிற்றுவிக்கப்பட்டு சமுதாய மேம்பாட்டிற்கான விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.

## இலட்சியம்

தன்னம்பிக்கையுடன், ஆளுமைப் பண்பை வெளிக்கொணர்ந்து நல்ல ஒரு முழுமையான சமுதாயப் பிரஜைகளை உருவாக்கவும், அனைத்துத் துறைகளிலும் மகளிர் தன் இலட்சனையைப் பதிக்க வேண்டும் என்ற இலட்சியப் பார்வையையும் கொண்டது தமிழ்த்துறை.

## தமிழ் இலக்கியப் பேரவை அலுவலக மாணவியர்கள் பதவியேற்பு



- தலைவர் — எஸ்.கீர்த்தனா
- உப தலைவர் — ரா.திவ்யா
- செயலர் — த.ரம்யா
- உப செயலர் — ஆ.வினுஆர்த்தி
- பொருளாளர் — மூ.அஞ்சிதா

## ஜீன் 2019

## பகடிவதைத் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்வு

ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரியின் பகடிவதைத் தடுப்பு செயற்குழு ஸ்ரீ வேலுமணி அம்மாள் நினைவு மண்டபத்தில் பகடிவதைத் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்வினை நடத்தியது. இந்நிகழ்விற்கு கல்லூரி முதல்வர் முனைவர்.கி.சித்ரா அவர்கள் முன்னிலை வகித்தார். திருமதி. எம்.வெண்ணிலா, வழக்கறிஞர் அவர்கள் சிறப்பு விருந்தினராக வருகைப் புரிந்தார். இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினர் பகடிவதையினால் ஏற்படும் தீமைகள் குறித்து மாணவியர்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தினார். ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவியர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.










**ஜீலை 2019**

## வாழ்வியல் விழுமியங்கள்
## சிறப்புச் சொற்பொழிவு

ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரி தமிழ்த்துறை தமிழ் இலக்கியப் பேரவை சார்பாக வாழ்வியல் விழுமியங்கள் குறித்து சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக முனைவர்.நீ.குப்புச்சாமி, தமிழ்த்துறைத் தலைவர் என்.ஜி.பி. கலை அறிவியல் கல்லூரி, வருகை புரிந்தார். வாழ்க்கையின் நன்மதிப்புகளை வளர்க்கும் விதம் வாழ்க்கைக்குத் தேவையான விழுமியக்கருத்துக்கள் குறித்து உரையாற்றினார். முதல்வர் கி.சித்ரா அவர்கள் தலைமை தாங்கினார். தமிழ்த்துறைத்தலைவர் முனைவர்.வெ.நிர்மலா வரவேற்புரை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் ஏராளமான மாணவியர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.









**ஜீலை 2019**

## கைத்தறி ஆடை அணிவகுப்பு

ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரி தமிழ்த்துறையின் தமிழ் இலக்கியப் பேரவையும், கோவை மக்கள் சேவை மையமும் இணைந்து தேசிய கைத்தறி தினத்தை முன்னிட்டு கைத்தறி ஆடை அணிவகுப்பு நிகழ்ச்சியினை நடத்தியது. அந்நிகழ்வில் ஏராளமான மாணவியர்கள் ஆர்வத்துடன் கைத்தறி ஆடை அணிந்து வந்து அணிவகுப்பில் கலந்து கொண்டனர். Dream Zone அமைப்பை சேர்ந்தவர்கள் நடுவராக கலந்து கொண்டனர். மத்திய அரசின் பரிந்துரைப்படி கோவை மக்கள் சேவை மையம் வருகிற ஆகஸ்ட் 7 ஆம் நாள் இறுதிசுற்று நடத்த உள்ளது. அதற்கான முதல் நிலைக் கல்லூரிச் சுற்றில் ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரியின் சார்பாக எஸ். ஹரிணி ஜெயலக்ஷ்மி மூன்றாம் ஆண்டு பி.காம் மாணவி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அம்மாணவி ஆகஸ்ட் 7 ஆம் நாள் நடைபெறும் இறுதிச்சுற்றில் பங்குபெறுவார்.








**ஆகஸ்ட் 2019**

# கோயமுத்தூர் மாவட்ட பள்ளிகளுக்கிடையிலான பேச்சுப்போட்டி

ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறையின் தமிழ் இலக்கியப் பேரவையின் சார்பாக கொண்டாடப்பட்ட சுதந்திரதினவிழாவின் ஒரு பகுதியாக கோயமுத்தூர் மாவட்ட பள்ளிகளுக்கிடையிலான பேச்சுப்போட்டி நடைபெற்றது. அவ்விழாவிற்குக் கல்லூரி முதல்வர் முனைவர்.கி.சித்ரா அவர்கள் தலைமைத் தாங்க, முனைவர்.வெ.நிர்மலா, தமிழ்த்துறைத் தலைவர் வரவேற்புரை வழங்க திரு.கி.தத்தாத்ரேயன், பேச்சாளர் சிறப்பு விருந்தினராக வருகைப் புரிந்தார். அவரது சிறப்புரையில் இன்றைய இளைஞர்கள் சுதந்திரத்தை எவ்வாறு கையாளுகின்றனர் என்றும், அதனால் ஏற்படும் நன்மை தீமைகள் குறித்து மாணவ, மாணவியர்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தினார். பின்னர் கோயமுத்தூர் மாவட்ட பள்ளிகளுக்கிடையிலான பேச்சுப்போட்டி நடைபெற்றது. அதில் 50 க்கும் மேற்பட்ட பள்ளிகளில் இருந்து ஏராளமான மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். போட்டியில் வெற்றி பெற்றோருக்குப் பரிசும், சான்றிதழும் நிறைவு விழாவின் போது வழங்கப்பட்டன. பின்னர் முனைவர்.ப.செல்வி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை நன்றியுரை நவில, நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.







**ஆகஸ்ட் 2019**

# 73 ஆவது சுதந்திர தினவிழா

ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் 73 ஆவது சுதந்திர தினவிழாவில் நம் நாட்டின் மூவர்ண தேசியக் கொடியினை உரிய மரியாதையுடன் ஏற்றி, கொடிப் பாட்டும், தேசிய கீதமும் இசைக்கப்பட்டு, இனிப்புகள் வழங்கியும் ஆகஸ்ட் 15, 2019 அன்று கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர். கி.சித்ரா அவர்கள் தேசியக்கொடியினை ஏற்றி மாணவியர்களுக்கு சிறப்புரை ஆற்றினார். அவரது உரையில் இன்றைய இளைஞர்கள் நமது தேசத்தினையும், தேசியக் கொடியினையும் உயிருக்கும் மேலாக மதித்துப் போற்றிக்காக்க வேண்டும் என்றும், நாம் ஒவ்வொருவரும் இந்நாட்டின் குடிமக்களாக அவரவர் கடமையைச் செவ்வனே செய்ய வேண்டும் என்றும் மாணவியர்களுக்கு எடுத்துரைத்தார். கல்லூரி மாணவியர்கள் அனைவரும் மனமகிழ்வுடன் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.














**அக்டோபர் 2019**

# கம்பராமயணம் சுழலும் சொல்லரங்கம்

ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரி தமிழ்த்துறை தமிழ் இலக்கியப்பேரவையும் கோவைக் கம்பன் கழகமும் இணைந்து கம்பராமயணம் சுழலும் சொல்லரங்கத்தினை அக்டோபர் 15, 2019 அன்று நடத்தியது. அந்நிகழ்விற்கு முனைவர்.கி.சித்ரா கல்லூரி முதல்வர் தலைமைத் தாங்கினார். சிறப்பு விருந்தினராக முனைவர். க.முருகேசன் கலந்து கொண்டார். ஆரண்ய காண்டத்தில் யாருடைய செயல்பாடுகள் கற்போர் நெஞ்சைப் பெரிதும் ஈர்க்கின்றன? என்ற தலைப்பில் மாணவியர்கள் சொல்லரங்கம் நடத்தினார்கள். அவற்றுள் அட்சய ஸ்ரீ II பி.எஸ்.சி உயிரி வேதியியல் என்ற மாணவி முதல் பரிசும், மா.கார்த்திகா II பி.எஸ்.சி கணிதம் என்ற மாணவி இரண்டாம் பரிசும், மா.பெர்ஷாகாட்பிரின் I பி.எஸ்.சி கணிதம் என்ற மாணவி மூன்றாம் பரிசும் பெற்றனர். வெற்றி பெற்றோர்க்கு நிறைவு விழாவில் சான்றிதழும், பரிசும் வழங்கப்பட்டன. முதல் இடம் பெற்ற மாணவி கோவை மாவட்டக் கல்லூரிகளுக்கிடையில் நடைபெறவிருக்கும் இறுதி சுற்றிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். முனைவர்.வெ.நிர்மலா, தமிழ்த்துறைத்தலைவர் நன்றி கூறினார். இறுதியாக நாட்டுப்பண் இசைக்க விழா இனிதே நிறைவுற்றது. ஏராளமான மாணவியர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.








அக்டோபர் 2019

# தேசிய ஒற்றுமை தினவிழா

தமிழ்த்துறையின் சார்பில் தேசிய ஒற்றுமை தினவிழாவானது 31.10.2019 அன்று கொண்டாடப்பட்டது. சர்தார் வல்லபாய் படேல் அவர்களின் பிறந்தநாளான அக்டோபர் 31ம் தேதியை மத்திய அரசு தேசிய ஒற்றுமை தினமாக அறிவித்துள்ளது. அதன்படி தேசிய ஒற்றுமை தினவிழாவில் சர்தார் வல்லபாய் படேலின் வாழ்க்கை, சிறப்புகள், சாதனைகள், இந்திய தேசத்துக்கு அவர் பங்களிப்பு போன்றவை குறித்த காணொளிக் காட்சி திரையிடப்பட்டது. பின்னர் அனைவரும் தேசிய ஒற்றுமை தின விழா உறுதிமொழியேற்றனர். அதைத் தொடர்ந்து காணொளிக் காட்சியின் அடிப்படையில் Kahoot App வழியாக ஆன்லைன் வினாடி வினாப் போட்டி நடத்தப்பட்டது. அதில் மாணவியர் ஆர்வத்துடன் பங்கேற்றனர். முதல் மூன்று பரிசுகளை முறையே ஏ.மதியரசி – முதுகலை முதலாமாண்டு நுண்ணுயிரியல் துறை, ஜி.ஸ்ரீ ஐஸ்வர்யா – முதுகலை முதலாமாண்டு உயிர் வேதியியல் துறை, ஏ.ஸ்வாதி – முதுகலை முதலாமாண்டு நுண்ணுயிரியல் துறை ஆகியோர் பெற்றனர். நிகழ்ச்சியில் ஆர்வத்தோடு பங்கேற்ற மாணவியரையும் பரிசு பெற்ற மாணவியரையும் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர்.வெ.நிர்மலா அவர்கள் வாழ்த்திப் பேசினார். தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர்.ப.செல்வி அவர்கள் நன்றியுரை நவில நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவுபெற்றது.






நவம்பர் 2019

## தேசிய கல்வி தினம்

தமிழ்த்துறையின் சார்பாக தேசிய கல்வி தினவிழா கொண்டாடப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர். கி.சித்ரா அவர்கள் தலைமை உரை வழங்கினார். விழாவின் நிகழ்வாக இன்றைய தகவல் தொழில் நுட்ப கல்வி ஆரோக்கியமானதே! ஆபத்தானதே! என்ற தலைப்பில் விவாத மேடை நடைபெற்றது. நடுவராக வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் D.பத்மாவதி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பு செய்தார். ஆரோக்கியமானதே என்னும் தலைப்பில் முனைவர் E.மேரிசைலா கணினி அறிவியல் துறை உதவிப்பேராசிரியர் மற்றும் முதுகலை முதலாம் ஆண்டு உயிர்வேதியியல் துறை மாணவி சுருதி ஸ்ரீ காந்தி ஆகியோரும் ஆபத்தானதே என்ற தலைப்பில் திருமதி.N.கார்த்திகா உயிர்வேதியியல் துறை உதவிப் பேராசிரியர் மற்றும் முதுகலை முதலாம் ஆண்டு உயிர் வேதியியல் துறை மாணவி வித்யா ஆகியோரும் கலந்து கொண்டு சொற்போர் நிகழ்த்தினர். விழாவில் கலந்து கொண்டு உரை ஆற்றிய அனைவருக்கும் நினைவு பரிசு வழங்கப்பட்டது.












**டிசம்பர் 2019**

# மாநில அளவிலான ஒரு நாள் இணையப் பயிலரங்கம்

ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரி தமிழ்த்துறையும் தமிழ் ஆய்வு அறக்கட்டளை, சென்னை இணைந்து மாநில அளவிலான ஒரு நாள் இணையப் பயிலரங்கத்தினை நடத்தியது. அந்நிகழ்விற்கு கல்லூரி முதல்வர் முனைவர்.கி.சித்ரா அவர்கள் தலைமைத் தாங்க தமிழ்த்துறைத் தலைவர் முனைவர்.வெ.நிர்மலா வரவேற்புரை வழங்கினார். பயிலரங்கத்தில் பயிற்றுநராக முனைவர். மா. தமிழ்ப்பரிதி, உதவிப்பேராசிரியர், இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம் வருகைப் புரிந்தார். தமிழ் விக்கிப்பீடியாவும் கட்டற்ற பண்பாடும் என்ற தலைப்பில் மாணவ, மாணவியர்களுக்குப் பயிற்சி கொடுத்தார். பங்கு பெற்றவர்களுக்கு சான்றிதழ் நிகழ்வின் நிறைவு விழாவில் வழங்கப்பட்டன. இறுதியாக நாட்டுப்பண் இசைக்க விழா இனிதே நிறைவு பெற்றது.












டிசம்பர் 2019

## பாரதி விழா

ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கல்லூரியின் தமிழ்த்துறையின் சார்பில் பாரதி விழா நடைபெற்றது. நிகழ்ச்சியில் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர்.வெ.நிர்மலா அவர்கள் வரவேற்புரை வழங்கினார். மேடைப் பேச்சாளரும் பயனீர் கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியருமான திரு. கோ.சம்பத்குமார் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு "மானுடம் பாடும் வானம்பாடி" என்னும் தலைப்பில் உரையாற்றினார். மகாகவி பாரதியின் மானுடநேயம், ஆளுமை குறித்தும் அவரது வாழ்வியல் குறித்தும் மாணவியரிடையே செறிவான உரை நிகழ்த்தினார். தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர்.ப.செல்வி அவர்கள் நன்றியுரை நவில விழா இனிதே நிறைவுபெற்றது.







"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்..." - பாரதியார்.

**ஜனவரி 2020**

## பாரம்பரியப் பண்பாட்டு விழா 2020

ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரி தமிழ்த்துறை மற்றும் கோவை விழாக் குழுவினர் இணைந்து பாரம்பரியப் பண்பாட்டு விழா 2020 யினை கல்லூரி வளாகத்தில் மிக கோலாகலமாகக் கொண்டாடினர். முனைவர்.கி.சித்ரா கல்லூரி முதல்வர் இவ்விழாவிற்கு தலைமைத்தாங்க, முனைவர்.வெ.நிர்மலா தமிழ்த்துறைத்தலைவர் அனைவரையும் வரவேற்றார். திருமதி.வா.காருண்யா, பேச்சாளர் சிறப்பு விருந்தினராக வருகைப் புரிந்தார். இவரது சிறப்புச் சொற்பொழிவில் தமிழர்களின் பண்பாடு, கலாச்சாரம் பற்றியும், பொங்கல் விழா பற்றியும் மாணவியர்களுக்கு எடுத்துரைத்தார். மேலும் விழாவில் பொங்கல் வைத்தல், வண்ணமிகு மாக்கோலம், பட்டிமன்றம், கிராமிய பாடல், கிராமிய நடனம், உரியடித்தல் போன்ற பல்வேறு போட்டிகள் நடைபெற்றன. அதில் மாணவியர்கள் மற்றும் பேராசிரியர்கள் அனைவரும் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். இறுதியாக நாட்டுப்பண் இசைக்க விழா இனிதே நிறைவுற்றது.




















**ஜனவரி 2020**

# குடியரசு தின விழா

ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் குடியரசு தின விழாவில் நம் நாட்டின் மூவர்ண தேசியக் கொடியினை உரிய மரியாதையுடன் ஏற்றி, கொடிப் பாட்டும், தேசிய கீதமும் இசைக்கப்பட்டு, இனிப்புகள் வழங்கியும் ஜனவரி 26, 2020 அன்று கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர். கி.சித்ரா அவர்கள் தேசியக்கொடியினை ஏற்றி மாணவியர்களுக்கு சிறப்புரை ஆற்றினார். அவரது உரையில் இன்றைய இளைஞர்கள் நமது தேசத்தினையும், தேசியக் கொடியினையும் உயிருக்கும் மேலாக மதித்துப் போற்றிக்காக்க வேண்டும் என்றும், நாம் ஒவ்வொருவரும் இந்நாட்டின் குடிமக்களாக அவரவர் கடமையைச் செவ்வனே செய்ய வேண்டும் என்றும் மாணவியர்களுக்கு எடுத்துரைத்தார். கல்லூரி மாணவியர்கள் அனைவரும் மனமகிழ்வுடன் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.







இந்தியக் குடியரசு நாள் இந்திய ஆட்சிமைக்கான ஆவணமாக இந்திய அரசுச் சட்டம் 1935 இன் மாற்றாக இந்திய அரசியலமைப்புச் சட்டம் செயலாக்கத்திற்கு வந்த நாளாகும்.

பிப்ரவரி 2020

## உலகத்தாய்மொழி தினம்

ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை சார்பாக உலகத் தாய்மொழி தினம் கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு முனைவர். கி.சித்ரா கல்லூரி முதல்வர் தலைமைத் தாங்கினார். முனைவர். வெ. நிர்மலா தமிழ்த்துறைத் தலைவர் வரவேற்புரை நல்கினார். சிறப்பு விருந்தினராக முனைவர். எஸ். குருஞானாம்பிகா உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அவி நாசிலிங்கம் நிகர் நிலைப் பல்கலைக்கழகம் வருகைப் புரிந்தார். அவருடைய சிறப்பு சொற்பொழிவில் தாய்மொழியின் தோற்றம் பற்றியும், அதன் சிறப்புகள் பற்றியும், வளர்ச்சிப் பற்றியும் மாணவியர்களுக்கு எடுத்துரைத்தார். 200 க்கும் மேற்பட்ட மாணவியர்கள் கலந்துகொண்டு பயன் அடைந்தனர். நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவுபெற்றது.







"தமிழுக்கும் அமுதென்று பேர் ! அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் !.."

பாரதிதாசன்.

மே 2020

# இணைய வழி ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி

ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை சார்பாக 13.05.2020 முதல் 17.05.2020 வரை இணைய வழியிலான ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர்.கி.சித்ரா அவர்கள் தலைமைத் தாங்க, முனைவர்.வெ.நிர்மலா, தமிழ்த்துறைத் தலைவர் வரவேற்புரை வழங்கினர். 13.05.2020 அன்று கற்றல் கற்பித்தலில் தொழில்நுட்பக் கூறுகள், முனைவர்.த.சத்தியராஜ், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீ கிருஷ்ணா ஆதித்யா கலை அறிவியல் கல்லூரி, கோவை. 14.05.2020 அன்று தமிழ்ப் பதிவுகளும் கூகுள் ஆட்சென்சும், முனைவர். இரா.குணசீலன், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பூ.சா.கோ.கலை அறிவியல் கல்லூரி, கோவை. 15.05.2020 அன்று இணையத்தில் தமிழ் மின்நூல் பதிப்பு முனைவர். ந. ராஜேந்திரன், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி, கோவை. 16.05.2020 அன்று வாழ்வியல் விழுமியங்கள், சொற்பொழிவாளர். திரு.கி.தத்தாத்ரேயன், ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம் கோவை. **17.05.2020 (10am – 11am)** அன்று தமிழுக்கு அமுதென்று பேர் முனைவர். பொருநை.க.மாரியப்பன், உதவிப்பேராசிரியர், தமிழ்மொழி & மொழிப்பெயர்ப்பியல் துறை, திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம் ஆந்திரப்பிரதேசம். **17.05.2020 (11am – 12pm)** அன்று உ.வே.சா வின் தமிழ்ப்பணி முனைவர். க. தனலட்சுமி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி ஆகியோர் சிறப்புப் பயிற்சியினை நன்முறையில் நல்கினர். அந்நிகழ்வில் தோராயமாக 180 பேராசிரியர்கள் கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.

மே 2020

# மாணவியருக்கான இணைய வழித் தன்னம்பிக்கை உரை நிகழ்ச்சி

03.06.2020 அன்று காலை 11.00 மணியளவில் ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறையின் சார்பில் மாணவியருக்கான இணைய வழித் தன்னம்பிக்கை உரை நிகழ்ச்சி - I நடத்தப் பெற்றது. முனைவர் சு. சீதாராமன், தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர், அரசு கலைக் கல்லூரி, கோவை அவர்கள் மூன்றாம் கை என்ற தலைப்பில் உரையாற்றினார்.

06.06.2020 அன்று காலை 11.00 மணியளவில் மாணவியருக்கான இணைய வழித் தன்னம்பிக்கை உரை நிகழ்ச்சி - II நடத்தப் பெற்றது. வாழ்வியல் எழுத்தாளரும் தன்னம்பிக்கைப் பேச்சாளருமான சிந்தனைக் கவிஞர் முனைவர் கவிதாசன் அவர்கள் கலந்து கொண்டு வெல்வதற்கே வாழ்க்கை என்ற தலைப்பில் தன்னம்பிக்கை, சுய முன்னேற்றம் மற்றும் வாழ்வியல் சார்ந்து உரையாற்றினார். மாணவியர் ஆர்வமுடன் பங்கு கொண்டனர்.






# மாணவியர்களின் சாதனை

மாணவியர்கள் தமிழ்த் துறையின் வாயிலாக பல்வேறு வகையான (கவிதை, கட்டுரை, பேச்சு, நடனம், பாடல், ஓவியம்) வெளிப்புற மற்றும் உட்புற போட்டிகளில் கலந்து கொண்டு பல பரிசுகளை வென்றுள்ளனர். 2019 – 2020 ஆம் கல்வியாண்டில் 81 மாணவியர்கள் பல்வேறு விதமான போட்டிகளில் பங்கேற்றுள்ளனர். 25 மாணவியர்கள் பரிசுகளை வென்றுள்ளனர்.



















## தமிழ்த்துறையின் தேர்ச்சி விகிதம்

**99%**



# பேராசிரியர்களின் சாதனை

❖ **விருது**

எம்துறைத் தலைவர் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கவிஞன் பதிப்பகத்தாரிடம் இருந்து ‘பேராசிரிய மாமணி’ என்னும் விருதினையும், மேலும் Youth Foundation என்ற அமைப்பிடம் இருந்து ‘வாழ்நாள் சாதனை’ விருதினையும் பெற்றுள்ளார். முனைவர். நா. தீபா, உதவிப்பேராசிரியர் திருப்பூர் கலை இலக்கியப் பெரு மன்றத்தாரிடம் இருந்து படைப்பிலக்கியத்திற்காக ‘திருப்பூர் சக்தி ’ விருதினைப் பெற்றுள்ளார்.

❖ **மின் நூல் வெளியீடு**

முனைவர். மு. ரேவதி, உதவிப்பேராசிரியர் 'அறிந்த பழமொழி அறியாத விளக்கம்’ & 'வேண்டாம்' என்ற இரு நூல்களையும், முனைவர். சு. திரிவேணி, உதவிப்பேராசிரியர் 'எங்கிருந்து வருகிறது' என்ற நூலினையும் வெளியிட்டுள்ளனர்.

❖ **முனைவர் பட்டம்**

முனைவர். மு. ரேவதி, உதவிப்பேராசிரியர் இக்கல்வியாண்டில் பாரதியார் பல்கலைக்கழகத்தின் கீழ் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

❖ **கருத்தரங்கம், பயிலரங்கம்…**

தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் பன்னாட்டு மற்றும் தேசிய அளவிலான கருத்தரங்குகளில் 14 ஆய்வுத்தாள்களை வழங்கியுள்ளனர். யுஜிசி அங்கீகாரம் பெற்ற ஆய்விதழ்களிலும், மின்னிதழ்களிலும், சிற்றிதழ்களிலும் 18 ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளனர். மேலும் 12 ஆசிரியர் திறன் மேம்பாட்டு பயிலரங்குகளிலும், பயிற்சிப் பட்டறைகளிலும் பங்கேற்றுள்ளனர்.











# புரிந்துணர்வு ஒப்பந்தம்



மகளிரின் கல்வி மேம்பாட்டிற்காக 1991 ஆம் ஆண்டு தொடங்கப் பெற்ற ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் தமிழ் ஆய்வு அறக்கட்டளை, சென்னை ஆகியோரிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் நிறைவேற்றப்படும் தீர்மானங்களாவன:

- மாணவர்களுக்குத் தமிழ்மொழியின் மீதும் அதன் இலக்கியங்கள் மீதும் பற்று ஏற்படுத்துதல்.
- கல்லூரி மற்றும் அறக்கட்டளை இணைந்து மொழி சார்ந்த தேசிய மற்றும் பன்னாட்டுக் கருத்தரங்கம் அல்லது பயிலரங்கம் நடத்துதல். அப்பணிகளில் மாணவியர்கள் மற்றும் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர்களை ஈடுபடச்செய்தல்.
- பன்னாட்டுத் தமிழ் அறிஞர்களோடு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு தமிழ் வளர்ச்சிக்கான முன்னெடுப்புப் பணிகளில் ஈடுபடுதல். என்பனவாகும்.

# படைப்புலகம்

## இயற்கை

இன்பம் தரும் இயற்கை!
மனத்துன்பம் தீர்க்கும் இயற்கை!
நோய்த் தீர்க்கும் இயற்கை!
நோய்க்கு மருந்துத் தரும் இயற்கை!
மனித வாழ்வின் வரம் இயற்கை!
மனித இனம் அழிப்பதோ இயற்கை!
சுத்தமானக் காற்றைத் தரும் இயற்கை!
மக்களைக் காக்கும் ஆயுதம் இயற்கை!
இன்னிசைப் பாடும் இயற்கை!
நன்னீர் தரும் இயற்கை!
இதமான சூழல் தரும் இயற்கை!
வானின் நீல நிறம்  இயற்கை!
மண் வாசனை இயற்கை!
சத்தான உணவு தரும் இயற்கை!
மனிதனின் சொத்தே இயற்கை!
இயற்கையின் அற்புதம் பல பல!
செயற்கை தரும் அழிவோ பல பல!

சி.கவி அரசி
பி.எஸ்.சி இரண்டாம் ஆண்டு கணிதம்

## எப்படி வாழ்வாள்?

கதிர் தோன்றி மறையும்
கரு ஊன்றி வளரும்
அதிகாலைக் குயில்களும்
அழகாகக் கூவும்!
தென்றலும் வீசும்
தேய்பிறையும் பேசும்
இரவு விண்மீன்களும்
எப்போதும் ஒளிரும்!
வயல்களும் செடிகளும்
வானுயர் மரங்களும்
நமக்காக வாழ்ந்து
நன்மைகளை ஈயும்!
செயற்கை உரங்களில்
சீரழிந்த வனங்களில்
இயற்கை அன்னை
எப்படி வாழ்வாள்?

பி.பவித்ரா
முதலாம் ஆண்டு நுண்ணுயிரியல்





# படைப்புலகம்

## அ - ஔ

அகல உழுகிறதை விட ஆழ உழு.

ஆனைக்கும் அடிசறுக்கும்.

இளங்கன்று பயமறியாது.

ஈக்கு விடம் தலையில் தேளுக்கு விடம் கொடுக்கில்.

உப்பில்லா பண்டம் குப்பையிலே.

ஊரோடு ஒத்து வாழ்.

எள் என்றால் எண்ணையாய் நிற்க வேண்டும்.

ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது.

ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்.

ஓதாதார்க்கு இல்லை உணர்வொடு ஒழுக்கம்.

ஔவை சொல்லுக்கு அச்சம் இல்லை.

பகவதி பவித்ரா

முதலாம் ஆண்டு வணிகவியல்




**குறுந்தகவல்கள் - பொய்யின் வகைகள்**

சுயநலப் பொய், பொதுநலப் பொய், அழவைக்கும் பொய், மகிழ்விக்கும் பொய், பொழுதுபோக்குப் பொய், ஏமாற்றும் பொய், தன்னம்பிக்கைக்காக சொல்லப்படும் பொய், மூடநம்பிக்கையை வளர்க்கும் பொய், கவி நயத்துக்காக சொல்லும் பொய், கதையின் வளத்துக்காகச் சேர்க்கும் பொய்...

சோ.ஜெயதேவி

முதலாம் ஆண்டு ஆங்கிலம்

# படைப்புலகம்

## தமிழின் அடைமொழிகள்

அருந்தமிழ் – அருமையான தமிழ்.

செந்தமிழ் – செம்மையான பண்புடைய உயரிய மொழி, தமிழ்.

பைந்தமிழ் – பசுமையான தமிழ்.

தீந்தமிழ் – கருத்துக்களை இனிமையுடனும் சுவையுடனும் பகிரும் தமிழ்.

தேன்தமிழ் – தேன் போன்ற சுவையான தமிழ்.

வல்லத்தமிழ் – வல்லமையான தமிழ்.

தென்தமிழ் – இந்தியாவின் தென் பகுதியில் பேசப்படும் தமிழ்.

செழுந்தமிழ் – செழுமையான சொல் வளங்களைக் கொண்ட தமிழ்.

வண்டமிழ் – வளமான மொழி.

பண்டமிழ் – பண் இசைகளைக் கொண்ட மொழி.

தாய்த்தமிழ் – தமிழ் நமக்கெல்லாம் தாய் போன்றது.

சங்கத்தமிழ் – சங்கங்களினால் வளர்க்கப்பட்ட ஒரே மொழி தமிழ்.

மூத்தத்தமிழ் – பிற மொழிகளைவிட மூத்தது தமிழ் மொழி.

நுண்தமிழ் – நுட்பமான கருத்துக்களைக் கொடுக்கக்கூடிய தமிழ்.

கற்றமிழ் – காற்றோர்களால் வளர்க்கப்படும் தமிழ்.

வெற்றித்தமிழ் – எத்தைனை மொழிகள் ஆதிக்கம் செலுத்தினாலும் அவற்றை வென்று தழைத்தோங்கும் தமிழ்.

பா.ஹர்ஷியனா பானு
முதலாம் ஆண்டு முதுகலை உயிர்வேதியியல்

# தமிழ் இலக்கியப் பேரவையின் அழைப்பிதழ்கள்














































